# செயலாற்றுகை அறிக்கை

2025 – நான்காவது காலாண்டு

2025

**இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு**

## நோக்கு

"நேர்மையை ஊக்கப்படுத்தும்
நியாயமானதும் ஊழலற்றதுமான இலங்கை
தேசத்தை நோக்கி"

## செயற்பணி

சட்டத்தை உறுதியாக அமுல்படுத்தல், தடுப்பு பொறிமுறைகள் மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் கூடிய ஆட்சியினூடாக ஊழலை ஒழித்து அதன் மூலம் வலுவான பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு உதவுதல், அனைத்து இலங்கையர்களினதும் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துதல் மற்றும் நாட்டின் வளங்களைப் பாதுகாத்தல்.


| உள்ளடக்கம் | பக்க இலக்கம் |
|---|---|
| **அறிமுகம்** | 1 |
| **முறைப்பாடுகளை சமர்ப்பித்தல்** | 4 |
| **புலனாய்வுகள் மற்றும் சோதனைகள்** | 6 |
| **வழக்கு தொடுத்தல்** | 7 |
| **தடுப்பு நடவடிக்கைகள்** | 11 |
| **மனிதவள மற்றும் பௌதீக வள மேலாண்மை** | 13 |

# 01. அறிமுகம்

2023 ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழு தாபிக்கப்பட்டுள்ளதோடு, சட்டத்தின் 3(2) உட்பிரிவின் பிரகாரம் அது குறித்தளிக்கப்பட்ட பெயரினால் கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாகவும் இடையறா வழியுரிமையையும் கொண்டிருத்தல் வேண்டுமெனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறே, ஆணைக்குழுவுக்கு சட்டத்தினால் கையளிக்கப்பட்டுள்ள தத்துவங்களை பிரயோகிக்கும் போது அல்லது பணிகளை புரியும் போது சட்டத்தின் கீழ் உரித்துடையதாகவுள்ள ஒரு நீதிமன்றம் அல்லது நியாயசபை தவிர வேறு எந்தவித தலையீட்டுக்கும் கீழ்படியாது சுயாதீனமாக செயற்படவேண்டுமென 3(4) உட்பிரிவின் மூலம் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 1.1 ஆணைக்குழுவின் அமைப்பு

### 1.1.1 ஆணைக்குழு உறுப்பினர்கள்

2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் 4(1) உட்பிரிவின் பிரகாரம் சட்டத்தில் நிபுணத்துவம் கொண்டவரும், மேன்மையடைந்தவரும் மற்றும் ஆகக் குறைந்தது (20) இருபதாண்டுளைக் கொண்ட அனுபவத்தை கொண்டுள்ளவருமான ஆளொருவர், அத்துடன் பின்வரும்

I. குற்றப்புலனாய்வு மற்றும் சட்ட வலுவுறுத்தல்
II. சட்ட – மருத்துவக் கணக்காகய்வு
III. சட்ட – மருத்துவக் கணக்கியல்
IV. பெறியியல்
V. சர்வதேச தொடர்புகளும் இராஜதந்திரச் சேவைகளும்
VI. பொதுமக்கள் அலுவல்கள் முகாமை
VII. பொது நிர்வாகம்

ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட துறைகளில், நிபுணத்துவம் கொண்டவர்களும் மேண்மையடைந்தவர்களும் மற்றும் ஆகக் குறைந்தது (20) இருபதாண்டுகளைக் கொண்ட அனுபவத்தை கொண்டவர்களுமான இரண்டு ஆட்களும் ஆணைக்குழுவின் உறுப்பினர்களாக நியமிக்கப்படுவர்.

அதற்கிணங்க,

- முன்னாள் மேன்முறையீட்டு நீதிபதி மற்றும் முன்னாள் பாராளுமன்ற பிரதி செயலாளர் திரு. டபிள்யு.எம்.என்.பி. இத்தவெல அவர்கள் - தவிசாளர்
- சிரேஷ்ட வங்கி அதிகாரியான மக்கள் வங்கியின் முன்னாளர் சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் திரு.கே. பேர்னார்ட் ராஜபக்ஷ அவர்கள் - உறுப்பினர்
- மேலதிக மன்றாடியார் அதிபதி சனாதிபதி சட்டத்தரணி திரு. சேதிய குணசேகர அவர்கள் - உறுப்பினர்

ஆகிய உறுப்பினர்கள் மூவரும் 2024 சனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் கடமைகளை ஆரம்பித்தனர்.

### 1.1.2 ஆணையாளர் நாயகம்


2023 ஆம் ஆண்டு 9 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 17(1) இன் படி நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்ற நீதிபதி ரங்க ஸ்ரீநாத் அபேவிக்ரம திசாநாயக்க, 2025 ஜனவரி 10 ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் இலஞ்சம் அல்லது ஊழல் சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகமாக பொறுப்பேற்றார்.

## 1.2 ஆணைக்குழுவின் செயற்பாடுகள்.

1. 2023 இல 09 எனும் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் கீழான குற்றங்கள் தொடர்பில் கிடைக்கப்பெறும் முறைப்பாடுகள் தொடர்பில் நியாயமான புலனாய்வுகளை மேற்கொள்ளல், போதியளவு சான்றுகள் உள்ள முறைப்பாடுகள் தொடர்பில் உரிய நீதிமன்றங்களில் வழக்கு தொடுத்தல் மற்றும் நீதிமன்றங்களில் அந்த வழக்குகளை வழிநடாத்தல்.
2. சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் பிரகடங்கள் தொடர்பில் மத்திய அதிகாரபீடமாக செயற்படுதல்.
3. ஊழலை தடுக்கும் பொருட்டு இலங்கையினால் கைச்சாத்திடப்பட்டுள்ள சர்வதேச ஒப்பந்தங்கள், உடன்படிக்கைகள் மற்றும் பொருந்தனைகளை நடைமுறைப்படுத்தல்.
4. ஊழல் செயற்பாடுகள் தொடர்பில் பொதுமக்களின் தெளிவை அதிகரித்தல்.
5. ஊழல் எதிர்ப்புக் கொள்கையை நடைமுறைப்படுத்தல் மற்றும் ஒழுங்குபடுத்தல்.
6. ஊழல் செயற்பாடுகளை கண்டறிவதற்காக அரச நிறுவனங்களின் சட்ட விதிகள், செயற்கோவைகள் மற்றும் நடவடிக்கை முறைகளைப் பரிசோதித்தல்.
7. ஊழலை ஒழிப்பதற்காக அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வழிகாட்டல்கள் மற்றும் கட்டளைகளை வழங்குதல்.
8. ஊழலைக் குறைக்கும் பொருட்டு தேவையான சட்டத் திருத்தங்கள் தொடர்பில் பரிந்துரைகளை அரசாங்கத்திற்கு சமர்ப்பித்தல்.
9. ஆணைக்குழுவின் உத்தியோகத்தர்கள் மற்றும் பணியாட் குழுவினரின் நியமனம், பதவி உயர்வு மற்றும ஒழுக்காற்றுக் கட்டுப்பாடுகள் தொடர்பான நடவடிக்கைகள்.

## 1.3 ஆணைக்குழுவின் கட்டமைப்பு

தற்போது, ஆணைக்குழுவின் நிறுவன அமைப்பு பின்வருமாறு காணப்படுகின்றது. மேலும் ஊழல் எதிர்ப்புச் சட்டத்தால் முன்னைய சட்டங்களால் வழங்கப்பட்டிருந்த கடமைகள் மற்றும் பொறுப்புகள் மாற்றம் அடைந்துள்ளதால் முன்னயை செயல்களுக்கு மேலதிகமாக ஆணைக்குழுவினால் பணிகளை ஆற்ற வேண்டியுள்ளது. எனவே ஆணைக்குழுவின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட்டுள்ளது.



## 02. முறைப்பாடுகளை சமர்ப்பித்தல்

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பான முறைப்பாடுகளை பின்வரும் வழிமுறைகள் மூலம் இலஞ்ச அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவிற்கு அனுப்ப அனுப்பி வைக்க முடியும்.

- 1954 எனும் இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம்
- தொலைநகல் (Fax) செய்தி மூலம்
- மின்னஞ்சல் மூலம்
- சமூகமளித்து முறைப்பாடுகளை ஒப்படைத்தல்
- அலுவலக முகவரிக்கு பெயர் குறிப்பிட்டு அல்லது அனாமதேய அடிப்படையில் கடிதங்களை சமர்ப்பிப்பதன் மூலம்


2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டம் நிறைவேற்றப்பட்ட பின்னர் பொதுமக்கள் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் பொதுமக்கள் காட்டும் ஆர்வம் அதிகரித்தமையினாலும் ஊழல் தடுப்பு பிரிவினால் நாடு பூராகவும் நடாத்தப்படும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள் மூலமும் மக்களுக்கான விழிப்புணர்வூட்டல் அதிகரித்தமையினாலும் இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பாக கடந்த ஆண்டுகளில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது 2025 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரையான காலப்பகுதி வரை முறைப்பாடுகளின் எண்ணிக்கையானது அதிகரித்திருப்பதை காணக்கூடியதாக உள்ளது.

இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களை புலனாய்வு செய்யும் ஆணைக்குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும் முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் செயலகத்தினால் பரிசீலித்த பின்னர் ஆணைக்குழுவிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. அங்கு சட்டத்துடன் தொடர்பில்லாத மற்றும் போதுமான உண்மைகளை வெளிப்படுத்தாத முறைப்பாடுகளை விசாரணைக்கு உட்படுத்தாமலிருப்பதற்கு ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும். 2015 முதல் 2025 வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளின் எண்ணிக்கையும், விசாரணைக்காக பரிந்துரைக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கையும் பின்வருமாறு.

| வருடம் | கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் | புலனாய்வு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகளின் எண்ணிக்கை ** |
|---|---|---|
| 2015 | 3,964 | 1,823 |
| 2016 | 3,450 | 2,435 |
| 2017 | 2,768 | 1,573 |
| 2018 | 3,465 | 2,086 |
| 2019 | 3,305 | 2,020 |
| 2020 | 2,764 | 1,909 |
| 2021 | 2,335 | 892 |
| 2022 | 2,512 | 921 |
| 2023 | 3,431 | 1,152 |
| 2024 | 4,267 | 1,105 |
| 2025 | 8,409 | 569 |

** சுற்றிவளைப்புக்காக கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள்

**கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகள் 2015 – 2025 வரை**




புலனாய்வு மேற்கொள்வதற்கு உத்தவிடப்பட்ட முறைப்பாடுகள் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவுக்கு முன்னளிப்புச் செய்யப்படுவதோடு, வேறு நிறுவனங்களிலிருந்து அறிக்கைகளை கோருவதற்கு மற்றும் புலனாய்வுகளை ஆரம்பிப்பதற்கு உள்ள சாத்தியப்பாடு தொடர்பில் பரிசீலிப்பதற்கு சட்ட அறிக்கைகளை கோருவதற்குத் அவசியமான முறைப்பாடுகள் தொடர்பில் ஏற்புடைய நடவடிக்கைகளை ஆணைக்குழுவின் செயலகப் பிரிவினால் மேற்கொள்ளப்படும்.

**ஆணைக்குழுவுடன் தொடர்புகொள்ள முடியுமான முறை**

**துரித அழைப்பு : 1954**

**மின்னஞ்சல் : ciaboc_gen@ciaboc.gov.lk**

**தொலைநகல் : 0112596360**

**முகவரி : 36, மலலசேகர மாவத்தை, கொழும்பு 07**

**ஆணைக்குழுவுக்கு நேரடியாக வருகை தருவதன் மூலமும் முறைப்பாடுகளை கையளிக்க முடியும்.**

## 03. புலனாய்வுகள் மற்றும் சோதனைகள்

2023 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்கள் தொடர்பான புலனாய்வுகள் ஆணைக்குழுவின் புலனாய்வுப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றன. சட்டத்தின் 42 ஆவது பிரிவின்படி,

- ஏதேனும் தகவலொன்றை பெற்றதன் பின்னர்
- முறைப்பாடொன்றைப் பெற்றதன் பின்னர்
- ஆணைக்குழுவின் வேண்டுகோளின் பேரில் அல்லது
- ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெற்ற வேறு ஏதேனும் முக்கியமான விடயத்தின் அடிப்படையில் ஆரம்பகட்ட விசாரணைகளை ஆரம்பிக்க முடியும். சட்டத்தின் பிரிவு 41 இல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றமொன்று புரியப்பட்டுள்ளதென ஆணைக்குழு திருப்தி காணும் பட்சத்தில், புலனாய்வுகளை நடத்த முடிவு செய்யலாம். எவ்வாறாயினும், பிரிவு 41 இன் கீழ் குற்றம் புரியப்பட்டுள்ளதென நியாயமான காரணங்கள் இருப்பதாக ஆணைக்குழு திருப்தி காணும் பட்சத்தில் ஆரம்பகட்ட விசாரணையை நடத்தாமல் புலனாய்வுகளை ஆரம்பிக்க முடியும்.

### 3.1 புலனாய்வு நடவடிக்கைகள்

ஆணைக்குழுவினால் 2025.01.01 ஆம் திகதி முதல் 2025.12.31 ஆம் திகதி வரை கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளில் புலனாய்வு செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்ட முறைப்பாடுகள் 569 இற்கான கோப்புகளின் புலனாய்வு நடவடிக்கைகள் புலனாய்வுப் பிரிவினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு, இதற்கு முன்னர் காலப்பகுதியில் கிடைக்கப்பெற்ற கோப்புக்களையும் உள்ளடக்கி 2025.09.30 ஆம் திகதி வரை மொத்தமாக 2,559 கோப்புக்களுக்கான புலனாய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

### 3.2 சுற்றிவளைப்புகள்

இலஞ்சம் பெறல் அல்லது இலஞ்சம் வழங்குதல் தொடர்பான சந்தர்ப்பங்களின் போது போதியளவு தகவல் மற்றும் முறைப்பாட்டாளரின் ஒத்துழைப்பு கிடைக்கப்பெறும் பட்சத்தில் ஆணைக்குழுவின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் குறித்த இலஞ்ச குற்றம் நிகழும் சந்தர்ப்பத்தில் சுற்றிவளைப்புக்களை மேற்கொண்டு கைது நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். 2025 ஆம் ஆண்டில் அவ்வாறான சுற்றிவளைப்புகள் 130 மேற்கொள்ளப்பட்டுள்ளதோடு, அவற்றுள் 68 சுற்றிவளைப்புக்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுற்றிவளைப்புக்களின் போது 84 சந்தேக நபர்களை கைது செய்ய முடிந்தது.

### 3.3 கைதுசெய்தல் நடவடிக்கைகள்

**3.3.1 2020 ஆம் ஆண்டு முதல் 2025 ஆம் ஆண்டின் நான்காவது காலாண்டு வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகள் மற்றும் மேற்கொள்ளப்பட்ட கைதுகள்**


| வருடம் | மேற்கொள்ளப்பட்ட பயனுள்ள சுற்றிவளைப்புகளின் எண்ணிக்கை | சுற்றிவளைப்புக்களின் போது கைதுசெய்யப்பட்ட எண்ணிக்கை |
|---|---|---|
| 2020 | 38 | 45 |
| 2021 | 33 | 36 |
| 2022 | 32 | 36 |
| 2023 | 43 | 57 |
| 2024 | 53 | 86 |
| 2025 | 68 | 84 |

## 04. வழக்கு தொடுத்தல்

புலனாய்வு நடவடிக்கைகள் நிறைவடைந்து வழக்குத் தொடர முடியுமான கோவைகள் தொடர்பில் வழக்குகளைத் தொடுக்கும் பணி ஆணைக்குழுவின் சட்டப் பிரிவினால் மேற்கொள்ளப்படும். அதற்கிணங்க, 2025 ஆம் ஆண்டில் 115 வழக்குகள் தொடுக்கப்பட்டுள்ளதோடு, அக்காலப்பகுதியில் நிறைவடைந்த வழக்குகளின் எண்ணிக்கை 69 ஆகும்.


### 4.1 2020 ஆம் ஆண்டு முதல் 2025 நான்காவது காலாண்டு வரை தொடுக்கப்பட்ட வழக்குகளின் தகவல்

| வருடம் | இலஞ்ச வழக்குகள் | ஊழல் வழக்குகள் | முறையற்ற சொத்துக்குவிப்பு வழக்குகள் | சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிக்காட்டாத வழக்குகள் | பணச் சலவை | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| 2020 | 47 | 1 | 2 | -- | -- | 50 |
| 2021 | 58 | 2 | -- | 2 | -- | 62 |
| 2022 | 62 | 26 | -- | 1 | -- | 89 |
| 2023 | 55 | 3 | 2 | -- | -- | 60 |
| 2024 | 70 | 10 | 3 | -- | -- | 83 |
| 2025 | 75 | 21 | 14 | -- | 05 | 115 |



### 4.2 2020 முதல் 2025 வரை நிறைவடைந்த வழக்குகளின் தகவல்

| வருடம் | இலஞ்ச வழக்குகள் | ஊழல் வழக்குகள் | முறையற்ற சொத்துக்குவிப்பு வழக்குகள் | சொத்துக்கள் பொறுப்புக்களை வெளிக்காட்டாத வழக்குகள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| 2020 | 52 | | 03 | -- | 55 |
| 2021 | 62 | | 05 | 02 | 69 |
| 2022 | 90 | | -- | 07 | 97 |
| 2023 | 58 | 10 | 01 | -- | 69 |
| 2024 | 62 | 07 | -- | -- | 69 |
| 2025 | 62 | 06 | 01 | -- | 69 |



### 4.3 2015 ஆம் ஆண்டு முதல் 2025 மூன்றாவது காலாண்டு வரை, தொடுக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை, நிறைவுசெய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை மற்றும் எதிராளிகள் குற்றவாளிகளாக உறுதிசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை

| வருடம் | தொடுக்கப்பட்ட வழக்குகள் | | | நிறைவுசெய்யப்பட்ட வழக்குகள் | | | | எதிராளிகள் குற்றவாளிகளாக உறுதிசெய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மேல் நீதிமன்றம் | நீதவான் நீதிமன்றம் | மொத்தம் | மேல் நீதிமன்றம் | நீதவான் நீதிமன்றம் | மூன்று நீதிபதிகள் அடங்கிய நீதிபதி | மொத்தம் | |
| 2015 | 76 | 32 | 108 | 41 | 11 | 0 | 52 | 15 |
| 2016 | 43 | 44 | 87 | 26 | 08 | 0 | 34 | 15 |
| 2017 | 41 | 32 | 73 | 68 | 20 | 0 | 88 | 57 |
| 2018 | 36 | 16 | 52 | 84 | 26 | 0 | 110 | 64 |
| 2019 | 37 | 09 | 46 | 75 | 19 | 0 | 94 | 54 |
| 2020 | 42 | 08 | 50 | 46 | 09 | 0 | 55 | 28 |
| 2021 | 57 | 05 | 62 | 43 | 26 | 0 | 69 | 09 |
| 2022 | 77 | 12 | 89 | 64 | 32 | 0 | 96 | 22 |
| 2023 | 56 | 04 | 60 | 60 | 09 | 0 | 69 | 19 |
| 2024 | 79 | 04 | 83 | 56 | 13 | 0 | 69 | 30 |
| 2025 | 115 | -- | 115 | 58 | 10 | 01 | 69 | 42 |

### 4.4 2025.01.01 முதல் 2025.12.31 ஆம் திகதி வரை நீதிமன்ற தீர்ப்புகளால் குற்றவாளிகள் என நிரூபிக்கப்பட்ட பிரதிவாதிகளின் விபரங்கள்

| தொ. இல | நிறுவனம் | குற்றவாளியாக்கப்பட்ட உத்தியோகத்தரின் பதவி | குற்றவாளியாக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை | குற்றவாளியாக்கப்பட்டவரின் வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 01 | சுகாதாரத் திணைக்களம் | சுத்த செய்யும் பணியாளர் - குளியாப்பிட்டி அரச மருத்துவமனை | 01 | 01 |
| | சுகாதார அமைச்சு | மிருக வைத்திய அதிகாரி | 01 | 01 |
| 02 | பொலிஸ் திணைக்களம் | உதவி பொலிஸ் அத்தியட்சகர் | 01 | 06 |
| | | போலிஸ் காண்ஸ்டபிள் | 04 | |
| | | உத பொலிஸ் பரிசோதகர் | 01 | |
| 03 | கல்வி அமைச்சு | அதிபர் | 01 | 01 |
| 04 | | பொது பிரஜைகள் | 11 | 10 |
| 05 | பிரதேச செயலகம் | தொழிநுட்ப உத்தியோகத்தர் | 01 | |
| | | பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | 04 |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உதவி திட்டமிடல் பணிப்பாளர் | 01 | |
| | | சாரதி | 01 | |
| 06 | அஞ்சல் திணைக்களம் | அலுவலக உதவியாளர் | 01 | 01 |
| 07 | குடிவரவு, குடியகழ்வு திணைக்களம் | முகாமைத்துவ உத்தியோகத்தர் | 01 | 01 |
| 08 | சாலை பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை | அலுவலக உதவியாளர் | 01 | 01 |
| 09 | வடமத்திய மாகாண சபை | பிரதான அமைச்சர் | 01 | 01 |
| | | பிரத்தியேக செயலாளர் | 01 | |
| 10 | திவி நெகும | அபிவிருத்தி உத்தியோத்தர் | 01 | 01 |
| 11 | மதுவரித் திணைக்களம் | மதுவரி கட்டுப்பாட்டாளர் | 02 | 01 |
| 12 | இலங்கை ச.தொ.ச நிறுவனம் | முன்னால் ச.தொ.ச. தலைவர் (முன்னால் பாராளுமன்ற உறுப்பினர்) | 01 | 01 |
| | விளையாட்டு அமைச்சு | முன்னால் விளையாட்டு அமைச்சர் | 01 | |
| 13 | நீதவான் நீதிமன்றம் | பதிவாளர் | 01 | 01 |
| 14 | இலங்கை மகாவெலி அதிகார சபை | காணி உத்தியோகத்தர் | 01 | 01 |
| 15 | பிரதேச மின் பொறியியலாளர் காரியாலயம் | கம்பி இணைப்பாளர் | 01 | 01 |
| 16 | கமநல சேவைகள் திணைக்களம் | கலநல ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் | 01 | 01 |
| | | கலநல அபிவிருத்தி உத்தியோகத்தர் | 01 | |
| 17 | மத்திய மீன் சந்தைத் தொகுதி | முகாமையாளர் | 01 | 01 |
| | | பாதுகாப்பு | 01 | |
| 18 | வனவிலங்குகள் காரியாலயம் | பீட்டு வனவிலங்கு அதிகாரி | 01 | 01 |
| **மொத்தம்** | | | **42** | **36** |

## 4.5 விசாரணை இடம்பெற்றுவரும் வழக்குகள்

**2025 டிசம்பர் 31 ஆம் திகதி வரை நீதிமன்றங்களில் விசாரிக்கப்படும் 305 வழக்குகளின் விபரம் பின்வருமாறு**

நீதவான் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை - 16

மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை - 288

மூவர் அடங்கிய மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்குகளின் எண்ணிக்கை - 01

## 05. தடுப்பு நடவடிக்கைகள்

இலஞ்சம் மற்றும் ஊழலின் தீமைகள் மற்றும் இலஞ்சம் மற்றும் ஊழல் தடுப்பு முறைகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக, நாடளாவிய ரீதியில், அரச துறை, தனியார் துறை, கல்வித் துறை மற்றும் பொதுமக்களை இலக்காகக் கொண்டு ஊழல் தடுப்பு நிகழ்ச்சித் திட்டங்களை நடத்துவதற்கு ஆணைக்குழுவினால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 5.1 2025.01.01 – 2025.12.31 வரை நடாத்தப்பட்ட ஊழல் தடுப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றிய சாராம்ச தகவல்

| நிகழ்ச்சிகள் இடம்பெற்ற நிறுவனம் | எண்ணிக்கை |
|---|---|
| அரச மாகாண மற்றும் அரச நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக | 115 |
| அரச சார்பு நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்கு | 67 |
| தனியார் நிறுவனங்களின் உத்தியோகத்தர்களுக்காக | 25 |
| வேறு தரப்பினர் ஆட்களுக்கு | 1 |
| வெகுசன ஊடகங்கள் ஊடாக நடாத்தப்படும் நிழச்சிகள் | 2 |
| **மொத்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை** | **210** |

### 5.2 உள்ளக விவகார அலகுகள் தொடர்பாக நடத்தப்பட்ட நிகழ்ச்சிகளின் விவரங்கள்

2025 பெப்ரவரி 18 ஆம் திகதி PS/SB/Circular/2/2025 இலக்க சுற்றுநிரூபத்தின் ஊடாக ‘‘அனைத்து அரச நிறுவனங்களிலும் உள்ளக விவகார அலகுகளை ஸ்தாபித்தல்’’ எனும் தலைப்பின் கீழ் ஜனாதிபதியின் செயலாளரினால் அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அரச நிறுவனங்களில் உள்ளக விவகார அலகுகளை ஸ்தாபித்தல் மற்றும் சில தெரிவு செய்யப்பட்ட அரச நிறுவனங்களுக்கு கேந்திர மத்திய நிலையமொன்றையும் பெயரிடுவதற்கு ஆலோசணைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த உள்ளக விவகார அலகுகளை நிறுவுவதற்கான நோக்கங்கள் பின்வருமாறு:

1. நிறுவனத்தினுள் ஊழலைத் தடுத்தல் மற்றும் நேர்மைத்திறனுள்ள கலாச்சாரமொன்றை வளர்த்தல்.
2. நிறுவனத்தினுள் அனைத்து செயற்பாடுகளிலும் வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புக் கூறுதலை உறுதிப்படுத்தல் மற்றும் நிறுவன செயற்பாடுகள் மற்றும் தீர்மானங்கள் தொடர்பான தகவல்களை பொது மக்கள் அணுகுவதை உறுதி செய்தல்.
3. நிறுவனத்தினுள் ஒழுக்கமுள்ள நேர்மைமிக்க நிர்வாகத்தை ஊக்குவித்தல்.
4. நிறுவனத்தினுள் இடம்பெறும் தவறான நடத்தைகளைப் புகாரளிப்பதை ஊக்குவிப்பதற்கும், அது தொடர்பான தகவல்களை அளிப்பவர்களை பாதுகாப்பதற்கும், இரகசியத்தன்மையைப் பேணுவதற்கும் ஒரு பாதுகாப்பான மற்றும் அணுகக்கூடிய பொறிமுறையை உருவாக்குதல்.
5. சட்ட அமுலாக்க முகவர் நிறுவனங்கள் மற்றும் இலஞ்சம் அல்லது ஊழல் பற்றிய சார்த்துதல்களைப் புலனாய்வு செய்வதற்கான ஆணைக்குழுவுடன் இணைந்து சட்டத்தை நிலைநிறுத்துவற்கு துணை நிற்றல்

போன்றவை இதன் அடிப்படையான நோக்கங்களாகும். இந்த முயற்சி 2023 ஆம் ஆண்டின் 09 ஆம் இலக்க ஊழல் தடுப்புச் சட்டம், ஊழலுக்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் சமவாயம் (UNCAC) உள்ளிட்ட பல்வேறு சர்வதேச ஊழல் எதிர்ப்பு வழிமுறைகளை மேலும் வலுப்படுத்தும்.

உள்ளக விவகார அலகுகள் குறித்து தெளிவுபடுத்துவற்கான முதலாவது அமர்வு 2025 பெப்ரவரி 27 ஆம் திகதி இடம்பெற்றதுடன். இந்த நிகழ்வில் அனைத்து அமைச்சுக்கள், மாகாண சபைகள் மற்றும் மாவட்ட செயலகங்கள் மற்றும் அடையாளம் காணப்பட்ட 107 சில அரச நிறுவனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி குறித்த நிறுவனங்களின் பிரதானிகள் கலந்து கொண்டனர். அத்துடன் 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வுகள் தொடர்பான சாராம்சம் கீழ்வருமாறு.

| இல | நிகழ்வு இடம்பெற்ற திகதி | நிகழ்வின் இலக்குக் குழு | பங்பற்றியவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | 2025.05.14 | அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் | 56 |
| 2 | 2025.05.15 | அடையாளம் காணப்பட்ட திணைக்களங்களின் மற்றும் அரச நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் | 58 |
| 3 | 2025.05.16 | அடையாளம் காணப்பட்ட திணைக்களங்களின் மற்றும் அரச நிறுவனங்களின் பிரதானிகள் மற்றும் சிரேஷ்ட அதிகாரிகள் | 54 |
| 4 | 2025.25.21 | ஜனாதிபதி செயலாகம், பிரதமர் அலுவலகம், கெபினட் அமைச்சர்களின் காரியாலயம், பாராளுமன்றம், நீதிமன்ற சேவைகள் ஆணைக்குழு போன்ற நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட அதிகாரிகள் மற்றும் மாகாண பிரதான செயலாளர்கள் மற்றும் மாவட்ட செயலாளர்கள். | 93 |
| 5 | 2025.06.12,13 | அடையாளம் காணப்பட்ட பத்து அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் அலுவலகங்களில் உள்ள உள்ளக விவகார அலகுகளின் உத்தியோகத்தர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள். | 46 |
| 6 | 2025.06.17,18 | பிரதமர் அலுவலகம், பாதுகாப்பு அமைச்சு, முப்படைகள் மற்றும் சிவில் பாதுகாப்பு அமைச்சுக்களில் உள்ளக விவகார அமைச்சுக்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் | 53 |
| 7 | 2025.07.01,02 | அடையாளம் காணப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் பத்து திணைக்களங்களின் உள்ளக விவகார அலகுகளின் உத்தியோகத்தர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள். | 55 |
| 8 | 2025.07.08,09 | அடையாளம் காணப்பட்ட பத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் உள்ளக விவகார அலகுகளின் உத்தியோகத்தர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள். | 47 |
| 9 | 2025.07.15,16 | அடையாளங்காணப்பட்ட அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் பத்து அரச நிறுவனங்களின் உள்ளக விவகார அலகுகளின் உத்தியோகத்தர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள். | 48 |
| 10 | 2025.07.22,23 | அடையாளம் காணப்பட்ட பத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் உள்ளக விவகார அலகுகளின் உத்தியோகத்தர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள். | 49 |
| 11 | 2025.07.29,30 | அடையாளம் காணப்பட்ட பத்து அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களின் உள்ளக விவகார அலகுகளின் உத்தியோகத்தர்கள் என தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகத்தர்கள். | 48 |

## 06. மனிதவள மற்றும் பௌதீக வள மேலாண்மை.

ஆணையத்தின் கடமைகளைச் செய்வதற்குத் தேவையான பௌதீக மற்றும் மனித வளங்களின் மேலாண்மை மற்றும் நிதி மேலாண்மை ஆகியவை நிர்வாகப் பிரிவு மற்றும் கணக்குப் பிரிவால் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த நடவடிக்கைகளின் முன்னேற்றம் தொடர்பான விபரம் பின்வருமாறு.

### 6.1 மனித வள முன்னேற்றம் - உள்நாட்டு பயிற்சி பட்டறைகள்.

**(2025.10.01–2025.12.31 வரையான காலப்பகுதி/ 2025 ஆம் வருடத்திற்கானது)**

| தொ. இல | பயிற்சி நிகழ்ச்சித்திட்டம் | பங்குபற்றிய உத்தியோகத்தர்களின் விபரம் | | காலப்பகுதி | செலவு ரூ. |
|---|---|---|---|---|---|
| | | பதவி | எண்ணிக்கை | | |
| 01 | சிவில் ஓய்வூதியத்தை கணக்குப் பார்த்தல் மற்றும் ஓய்வூதியம் செலுத்தல் தொடர்பான பயிற்சி பாசறை | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 1 | 2025.10.22/23 | ரூ.13,000/- |
| 02 | பொருட்களுக்கான வேலை மற்றும் உபதேசமல்லாத சேவைகளுக்காக | அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 2 | 2025.10.23/24 | ரூ.26,000/- |
| 03 | விடுமுறைக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களின் பொறுப்புக்கள் மற்றும் கடமைகள் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 1 | 2025.10.30/31 | ரூ.13,000/- |
| 04 | workshop on preliminary investigation | அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 2 | 2025.11.04 | ரூ.15,000/- |
| 05 | பொருட்களுக்கான வேலை மற்றும் உபதேசமல்லாத சேவைகளுக்காக | அபிவிருத்தி உத்தியோகத்தர<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 2 | 2025.11.26/27 | ரூ.26,000/- |
| 06 | workshop on advanced MS Exel | அபிவிருத்தி உத்தியோகத்தர் 3<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் 3 | 6 | 2025.11.24/25 | ரூ.84,000/- |
| 07 | களஞ்சிய முகாமைத்துவம் | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 1 | 2025.11.27/28 | ரூ.26,000/- |
| 08 | Workshop on Database appliations using MS Access | அபிவிருத்தி உத்தியோகத்தர் 2<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் 4 | 6 | 2025.12.18/19 | ரூ.90,000/- |
| 09 | Filling official letter writing | அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 2 | 2025.12.10 | ரூ.15,000/- |
| 10 | Best practice in handling audit quarries | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 1 | 2025.12.15 | ரூ.7,500/- |
| 11 | Training on official letters and reports | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 2 | 2025.12.17 | ரூ.15,000/- |
| 12 | Ms office essentials word excel powerpoint | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 5 | 2025.12.10/11 | ரூ.75,000/- |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 13 | நிறுவன முகாமைத்துவத்துக்காக டிஜிட்டல் தொழிநுட்பம் | அபிவிருத்தி உத்தியோகத்தர் | 2 | 2025.12.18/19 | ரூ.26,000/- |
| 14 | தாபன விதிக்கோவை மற்றும் நிதிப் பிரமாணம் | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 2 | 2025.12.15/16 | ரூ.26,000/- |
| 15 | සටහන් ලිපි වාර්තා ලිවීම පිළිබඳ පුහුණුව | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 2 | 2025.12.19 | ரூ.14,000/- |
| 16 | சம்பள உயர்வு தொடர்பான பயிற்சி பாசறை | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 5 | 2025.12.16/17 | ரூ. 65,000/- |
| 17 | Workshop on Empowering workplace productivity through AI | அபிவிருத்தி உத்தியோகத்தர் 3<br>முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் 4 | 7 | 2025.12.10 | ரூ.52,500/- |
| 18 | 2024 ஆம் ஆண்டுக்கு புதிய கொள்வனவுகளை மேற்கொள்வதற்கான புதிய வழிகாட்டல்கள் | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 2 | 2025.12.17/23 | ரூ.30,000/- |
| 19 | Advance MS Excel | முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் | 4 | 2025.12.22/23 | ரூ.54,000/- |
| 20 | 2024 ஆண்டுக்கான கொள்முதல் தொடர்பான பயிற்சி பாசறை | விசாரணை உத்தியோகத்தர் | 8s0 | 2025.12.19/20 | ரூ. 363,856/54 |
| 21 | உலக வங்கியின் (ளுவுயுசு) தொழிநுட்ப உதவி தொடர்பான பயிற்சி பாசறை | உலக வங்கி அதிகாரி<br>சட்ட உத்தியோகத்தர்<br>விசாரணை உத்தியோகத்தர் | 90 | 2025.12.02/03/05 | ரூ.343,860.00 |

**6.2 மனிதவள அபிவிருத்தி வெளிநாட்டுப் பாடநெறிகள் (2025.10.01 – 2025.12.31 வரை / 2025 ஆம் வருடத்திற்கானது)**

| தொ. இல | கருத்தரங்கு மற்றும் செயலமர்வு இடம்பெற்ற நாடு | செயமலர்வின் பெயர் | கலந்து கொண்ட உத்தியோகத்தர் | காலப்பகுதி | செலவு விபரம் |
|---|---|---|---|---|---|
| 1 | Malaysia | Executive certificate course for strategic management of Anti-Corruption programme | Mr. MDCN Gunathilaka - Inspector of Police<br>Mr. WAMS Bandara - Police Sergeant | From 08/10/2025 to 25/10/2025 | Incidental Allowance – USD 96<br>Combined Allowance – USD 136 |
| 2 | Japan | Criminal Justice Response to corruption | Miss. W.M.T.D. Bandara - Assi. Director General<br>Mrs. J.P.T.N. Jayaneththi - Asst. Director (Legal)<br>Mr. S.M. Sabry - Asst. Director (Legal) | From 20/10/2025 to 21/11/2025 | Incidental Allowance – USD 1125<br>Warm clothing allowance - Pound 150 |
| 3 | Doha Qatar | Eleventh session of the confrrence of the parties to the United Nations Convention against Corruption | Mr. Chethiya Goonasekara - Commissioner - III<br>Mrs. L.K.T.D. Dayarathna - Asst. Director General | 15/12/2025 to 19/12/2025 | Air tickets - Rs. 458,000/-<br>Incidental Allowance – USD 480<br>Combined Allowance – USD 2562<br>Insurance - Rs. 9,096/- |
| 4 | New York | Second Global conference on harnessing data to improve corruption measurement | Mrs. K.H.I.S.Siriwardana - Deputy Director General | 02/12/2025-04/12/2025 | Air tickets - Rs. 426,000/-<br>Incidental Allowance – USD 240<br>Combined Allowance – USD 2226<br>Insurance - Rs. 4,108/45 |

### 6.3 2025.12.31 வரையான நிதிச் செலவுகள்

Expenditure Report as at 31/12/2025

| Expenditure Subject No. | Finance Code | Category/Object/Item Description | Budgetary Allocation 2025 | Expenditure as at 31.12.2025 |
|---|---|---|---|---|
| 010-1-1-0-1001 | 11 | Salaries and Wages | 296,180,000.00 | 293,449,179.30 |
| 010-1-1-0-1001 | 21 | Salaries and Wages | 16,800,000.00 | 16,800,000.00 |
| 010-1-1-0-1002 | 11 | Overtime and Holiday Payments | 12,470,000.00 | 12,379,196.25 |
| 010-1-1-0-1003 | 11 | Other Allowances | 355,000,000.00 | 350,482,091.58 |
| 010-1-1-0-1101 | 11 | Travelling Expenses - Domestic | 6,125,000.00 | 6,105,537.79 |
| 010-1-1-0-1102 | 11 | Travelling Expenses - Foreign | 40,000,000.00 | 12,509,498.39 |
| 010-1-1-0-1201 | 11 | Stationary and Office Requisites | 24,100,000.00 | 24,089,314.42 |
| 010-1-1-0-1202(002) | 11 | Fuel Allowance | 12,500,000.00 | 10,340,508.83 |
| 010-1-1-0-1202(009) | 11 | Fuel for Pool Vehicles | 20,400,000.00 | 14,197,906.53 |
| 010-1-1-0-1202(010) | 11 | Fuel for Other Purposes | 100,000.00 | 0.00 |
| 010-1-1-0-1203(002) | 11 | Uniforms | 220,000.00 | 164,000.00 |
| 010-1-1-0-1301 | 11 | Vehicles | 25,000,000.00 | 20,650,794.66 |
| 010-1-1-0-1302 | 11 | Plant and Machinery | 6,410,000.00 | 4,437,511.49 |
| 010-1-1-0-1303 | 11 | Building and Stuctures | 12,300,000.00 | 463,678.20 |
| 010-1-1-0-1304 | 11 | Software Maintenance | 2,000,000.00 | 1,243,408.00 |
| 010-1-1-0-1401 | 11 | Transport | 2,100,000.00 | 950,000.00 |
| 010-1-1-0-1402 | 11 | Postal and Communication | 8,365,000.00 | 8,362,480.92 |
| 010-1-1-0-1403 | 11 | Electricity and Water | 36,000,000.00 | 32,069,880.95 |
| 010-1-1-0-1404 | 11 | Rent and Local Taxes | 1,920,000.00 | 1,856,055.59 |
| 010-1-1-0-1405 | 11 | Cleaning and Janitorial Services | 15,100,000.00 | 14,899,638.58 |
| 010-1-1-0-1407 | 11 | Security Services | 6,100,000.00 | 6,062,810.00 |
| 010-1-1-0-1408 | 11 | Lease Rental for Vehicles procured Under Operatonal Leasing Other | 44,600,000.00 | 43,451,879.04 |
| 010-1-1-0-1409(138) | 11 | Machinery and Office Equipment Service Agreements | 10,000,000.00 | 2,963,612.56 |
| 010-1-1-0-1409(139) | 11 | Vehicle Insurance | 2,000,000.00 | 1,154,528.67 |
| 010-1-1-0-1409(140) | 11 | Miscellaneous Services Expenditure | 4,380,000.00 | 4,373,787.16 |
| 010-1-1-0-1505 | 11 | Subscriptions and Contributions Fee | 1,430,000.00 | 0.00 |
| 010-1-1-0-1506 | 11 | Property Loan Interest to Public Servants | 900,000.00 | 729,282.24 |
| 010-1-1-0-2001 | 11 | Buildings and Stuctures | 40,000,000.00 | 35,067,983.98 |
| 010-1-1-0-2003 | 11 | Vehicles | 1,000,000.00 | 861,400.00 |
| 010-1-1-0-2102 | 11 | Plant, Machinery and Equipment | 15,000,000.00 | 6,423,393.83 |
| 010-1-1-0-2103 | 11 | Furniture and Office Equipment | 50,000,000.00 | 46,269,241.56 |
| 010-1-1-0-2401 | 11 | Staff Training | 5,000,000.00 | 4,543,729.62 |
| 010-1-1-3-2509 | 11 | Bribery and Corruption Awarenees Programme for the Public (Other) | 30,000,000.00 | 7,338,413.18 |
| 010-1-1-5-2509 | 11 | Facilitation of implementing Anti-Corruption Act | 270,500,000.00 | 4,302,699.35 |
| Total | | | 1,374,000,000.00 | 988,993,442.67 |

### 6.4 2025.12.31 ஆம் திகதி வரையான நிதி முன்னேற்ற சாரம்சம்

| | வரவுசெலவு ஒதுக்கீடு 2025 | 2025.12.31 ஆம் திகதிக்கு முன்னேற்றம் |
|---|---|---|
| மீண்டுவரும் செலவினம் | 962,500,000.00 | 884,186,581.15 |
| மூலதனச் செலவினம் | 411,500,000.00 | 104,806,861.52 |
| **மொத்தம்** | **1,374,000,000.00** | **988,993,442.67** |

### 6.5 ஆளணி தொடர்பான தகவல்கள்

2025.12.31 ஆம் திகதி வரை பணியாளர் குழாம் தொடர்பான தகவல்கள்

| மட்டம் / நிலை | அனுமதிக்கப்பட்ட ஆளணி ** | தற்போதுள்ள ஆளணி |
|---|---|---|
| சீரேஷ்ட மட்டம் | 63 | 38 |
| மூன்றாம் நிலை | 218 | 6 |
| இரண்டாம் நிலை | 242 | 105 |
| ஆரம்ப நிலை | 126 | 76 |
| **மொத்தம்** | **649** | **225** |
| இலங்கை பொலிசின் இருநிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்டு சேவைப் புரியும் புலனாய்வு உத்தியோகத்தர்கள் | 283 | 250 |
| **முழு மொத்தம்** | **932** | **475** |

** 2023 ஆம் ஆண்டு எண் 9 கொண்ட ஊழல் தடுப்பு சட்டத்தின் 26(1) ஆம் பிரிவின் படி, ஆணையத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 971 பணியாளர்களைக் கொண்ட ஒரு பணியாளர் குழாமொன்று அவசியம் என ஆணைக்குழு தீர்மானித்துள்ளது. ஆனால், அதே சட்டத்தின் 26(2) ஆம் பிரிவின் படி, இப்பணியாளர்களுக்கான ஊதியம் மற்றும் சேவை நிபந்தனைகள் இதுவரை இலங்கை பாராளுமன்றத்தால் அங்கீகரிக்கப்படாத காரணத்தால், தற்போது பணியில் உள்ள பணியாளர்கள் எண்ணிக்கை ஏலவே முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் எண்ணிக்கைக்குள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.